12

சாம்பலுக்குள்

-ஆர். சூடாமணி

சில பேருடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று கேட்கத் தோன்றுகிறது. பிறக்கிறார்கள். சிறிதுகாலம் மூச்சுவிடுகிறார்கள். ஒரு நாள் இறந்துபோகிறார்கள். அந்தச் சிறிது காலத்தில் சிலருக்குச் சுகம். சிலருக்குத் துன்பம். இரண்டுமே நேர்க்கோட்டுச் சாதாரணங்கள். ஆச்சரியமான நிகழ்வுகளோ செயல்பாடுகளோ இல்லாத சாரமற்ற தொடர்கள். சுடரற்ற வெறும் சாம்பற் குவியல்கள்.

ராஜாமணி மாமியின் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

ராஜாமணி பதினெட்டு வயதுவரை பெருமாள் கோயில் ஏழைப் பரிசாரகரின் தாயற்ற மகள். பதினெட்டு வயதில் தனியார் கம்பெனி குமாஸ்தாவின் மனைவி. பத்தொன்பது வயதில் ஓர் ஆண் குழந்தையின் தாய். பத்தொன்பதரை வயதில் குழந்தையை இழந்த தாய். இருபத்தொரு வயதில் இரண்டு அபார்ஷன்களைத் தாண்டி வந்த நலிவுற்ற சீக்காளி. இருபத்தொரு வயது மூன்று மாதங்களில் வாழாவெட்டி.

ஐம்பத்தோரு வயதில் இதோ என்னெதிரே பிணமாய்க் கிடக்கும் இப்போது வரை வாழாவெட்டி.

ராஜாமணியைப் படைக்க உட்கார்ந்தபோது பிரம்மதேவன் மிகவும் சந்தோஷமாக இருந்திருக்க வேண்டும். அழகைப் பாதாதி கேசமாய்த் தொடங்கி முகத்துக்கு வரும்போது உடல் மற்றும் அழகு இரண்டின் உச்சியை ஒரு சேர எட்டிவிடும் நோக்கத்துடன் செயல்பட்டிருக்க வேண்டும். தங்க நிறமும் பூம்பாதங்களும் தளிர் விரல்களும் ஒயிலுடைய நீண்ட கால்களும் வடிவமைத்துச் செதுக்கி இடை, வயிறு, மார்பு, கழுத்து, தோள்கள் இவையும்... பிறகு அவனுக்கென்ன ஆயிற்று? கை ஏன் தடுமாறியது? பிரம்ம சிருஷ்டிகள் அழிந்துபோகும். கலைமகளின் அருட்பார்வை பெறும் படைப்புகளுக்கு அழிவில்லை என்று யாரோ ஒரு கவிஞன் பாடிய குரலைக் கேட்டு மனைவியிடம் நேர்ந்த பொறாமையால் கவனம் பிசகிவிட்டதா?

வீனஸ் உடம்பின்மேல் சோளக்கொல்லைப் பொம்மையின் முகம் வந்து உட்கார்ந்து கொண்டது.

தனியார் கம்பெனி குமாஸ்தா உடலைப் பார்த்தான். தலையசைத்தான்.

பணச்செலவு இல்லாமல் வலுவில் வரும் வரனைவிட வேறென்ன பாக்கியம் இருக்க முடியும் ஏழைப் பரிசாரகருக்கு? திருமணம் நடந்தது. ராஜாமணி 'எனக்கு இத்தனை அதிருஷ்டமா!' என்று எண்ணி எண்ணி உருகினாள். மணமகன் அப்படியொன்றும் மன்மதன் இல்லை. ஆனால் இந்த முகத்தின் அருகில் எந்த ஆடவனும் நூறு மன்மதனுக்குச் சமம்.

அந்த முகம் அவளுடைய இருபத்தோராம் வயதில்தான் கணவன் கண்களுக்குத் தெரிந்தது. முன்துருத்திய பற்களையும் சப்பை மூக்கையும் பிதுங்கும் உருண்டை விழிகளையும் பிசுபிசுத்த தலைமுடியையும் அப்போதுதான் பார்ப்பவன்போல் பார்த்தான். முகம் சுளித்தான். விரைவிலேயே வேறு துணை தேடிக்கொண்டு அவளைவிட்டு நீங்கினான்.

மூன்று வருஷங்கள் ஆயிற்றாம் அவளுக்கு. அவன் திரும்பி வரமாட்டான் என்று புரிய. வாழாவெட்டி என்ற பெயருடன் பிறந்தகம் திரும்பி, தகப்பனாரின் கரண்டிக்கு வாரிசாகி வீடுகளில் சமையல் வேலை செய்து சம்பாதித்தவள் தினமும் கணவனுக்காக உணவு தயாரித்து வைத்துக் காத்திருந்தாள். திடீரென்று அவன் வந்தால் வயிறு வாடக்கூடாதே! விலக்கு நாட்களில் எஜமான வீடுகளில் உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். அந்த நாட்களில் அப்பா கூட அவள் கையால் சாப்பிடமாட்டார். கோயில் மடப்பள்ளி உணவையும் அவளைத் தொடவிட மாட்டார். தாமே அவளுக்குச் சமைத்துப் போடுவார். அதில் பாதியை அவள் கணவனுக்காக மீத்து வைப்பாள்.

மூன்று ஆண்டுகள் ராஜாமணி இவ்வாறு கணவனுக்கு உணவு தயாராக வைத்திருந்தாள். ஒரு நாள் கூட தவறாமல் ஆயிரத்துத் தொண்ணூற்றைந்து நாட்கள்.

பிறகு ஒரு நாள் அப்பா செய்து தந்த உணவு முழுவதையும் தானே உண்டாள்.

''என்ன ராஜி? ஆச்சரியமாயிருக்கே!''

தட்டில் அப்பா வைத்திருந்த சாதத்தில் கடைசியாய் மிச்சமிருந்ததையும் வழித்து இலையில் போட்டுக் கொண்டு மோர் ஊற்றி, மீதமிருந்த வத்தல் குழம்பு முழுவதையும் தொட்டுக் கொண்டு இரண்டு வாய் அள்ளி உறிஞ்சிப் புசித்தவள் நிமிர்ந்து பார்த்து புன்னகை செய்தாள். உருண்டைக் கண்களில் எந்த உணர்ச்சியும் தெரியவில்லை.

10 ஒரு பிரசவமும் இரண்டு குறைப் பிரசவங்களும் மூன்றாண்டின் எதிர்பார்ப்புத் துடிப்பும் சேர்ந்து நலிவுறுத்திவிட்ட உடம்பு சிறிது சிறிதாய் தேற ஆரம்பித்தது.

அதே காலக்கட்டத்தில் ஏழைப் பரிசாரகர் நோய் வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்தார். பக்கவாதம்.

தகப்பனாரைக் காப்பாற்றும் பொறுப்பை ராஜாமணி ஏற்றுக் கொண்டாள். கோவிலில் அவர் பணியைத் தான் செய்ய முன் வந்தாள். அர்ச்சகர் நல்லவர். ஒப்புக் கொண்டு வேலையில் அமர்த்தி, மாதத்தில் மூன்று நாட்களுக்கு வேறொரு தவசிப்பிள்ளையை ஏற்பாடு செய்து அவளை ஒரு மகள்போல் கண்ணியமாய் நடத்தினார்.

ஆனால் விரைவிலேயே வேறு மாதிரி பேச்சுகள் சுற்றிலும் எழுந்தன.

அர்ச்சகர் கண்களில் நீர் துளித்தது.

''நான் என்னம்மா செய்வேன் ராஜி. பெருமாள் சாட்சியா நம்ம ரெண்டு பேர் மனசிலும் கல்மிஷம் இல்லே. நான் வயசானவன். நீ என் குழந்தை மாதிரி. உன் வீட்டுக் கஷ்ட நிலை தெரியும். வயித்தில் அடிக்கிறேன்னு நினைக்காதே. சுவாமிக்குப் பூ எடுத்துப் போடறவன் நாலு பேர் பேச்சுக்கு அப்பாற்பட்டவனாய் இருக்கணுமேம்மா...''

அவள் சில வினாடிகள் அவரைப் பார்த்தவாறு மௌனமாய் நின்றாள். விழுந்து அவர் கால்களில் வணங்கினாள். வெளியேறினாள்.

அப்பாவும் அவளும் சாப்பிட வேண்டும். நோயாளிக்குச் சிகிச்சை வேண்டும். பராமரிப்பு வேண்டும். கோயில் வேலையில் வருமானம், உணவு இரண்டுமே கிடைத்திருந்தன. அந்த வேலையை நம்பிக் கொண்டு தனி வீடுகளில் வேலையை விட்டிருந்தாள். அப்பாவைக் கவனிக்க வேண்டியிருந்ததால் அதற்கு நேரமும் இல்லை.

இப்போது அந்த வீடுகளுக்கு மீண்டும் சென்று பார்த்தபோது வேறு நபர்களை அமர்த்தியிருந்தார்கள்.

வேலை வேட்டையில் இறங்கினாள்.

எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இரண்டு வீடுகளில் கிடைத்தது.

மழையோ பனியோ காலை மூன்று மணிக்குக் கண் விழித்து அப்பாவைக் கவனித்துச் சுத்தப்படுத்தி தர்ம ஆஸ்பத்திரியில் சொல்லியிருந்த லேசான உடற்பயிற்சிகளைச் செய்வித்துக் காப்பி கொடுத்துத் தானும் காப்பி என்ற பெயரில் எதையோ குடித்து இடையில் ஒரு சாதம் வடித்து இறக்கி அவசரக் குளியல் முடித்து அடுத்த போர்ஷன் மாமியின் பாதுகாப்பில் அப்பாவைக் கூனிக் குறுகி ஒப்படைத்துவிட்டு ''வரேப்பா!'' என்ற குரலின் எதிரொலி அடங்குமுன் பஸ்ஸைத் துரத்திப் பிடித்து ஆறு மணிக்குச் சேருமிடம் போய்ச்சேர்ந்தால் சில நாட்கள் பத்து நிமிஷத் தாமதத்துக்காக ''சொன்னா சொன்ன டயத்துக்கு டாண்ணு வந்து நிக்கணும். இல்லேன்னா வேலைக்கு வராம வீட்டுல ராணி மாதிரி சொகுசாய் உக்காந்திருக்கணும். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைன்னா முடியுமோ?'' என்ற பேச்சு கேட்க நேரும்.

அலைச்சலும் கவலையும் உழைப்புமாய் உடல் நலம் இறங்கினாலும் செலவும் கடனும் ஏறிக் கொண்டிருந்தன.

அவளுடைய இருபத்தெட்டாம் வயதில் அப்பா காலமானார்.

செலவு குறைந்ததென்னமோ உண்மை. ஆனால் மனதில் சோகம் சுமை கூட்டியது. நோயாளியாய் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தாலும் அப்பா இருக்கிறார் என்ற தெம்பு முன்பு இருந்தது. இப்போது தனிமை இருந்தது. ஆண் துணை இல்லாத இளம் வாழாவெட்டி என்றால் சுலபமான வேட்டை என்பதுபோல் நடந்து கொள்ளும் ஆட்களைச் சமாளிக்க வேண்டிய சங்கடம் இருந்தது.

''ராஜிம்மா!'' என்ற தீனமான அழைப்பும், ''நாராயணா!'' என்ற வேதனையான முனகலும் குழறும் நாவிலிருந்து மறுபடியும் ஒலிக்காதா என்ற ஏக்கம் இரவெல்லாம் துணையிருந்தது அப்பாவுக்குப் பதிலாய்.

பனியையும் மழையையும் பொருட்படுத்தாத உழைப்பு நிமோனியா காய்ச்சலாக விளைந்தது. மூன்று வாரம் படுக்கையில் கிடந்தாள். அக்கம் பக்கத்து நல்ல நெஞ்சங்கள் உதவின. ஆனால் கடன் ஏறியது. நன்றிக்கடன். பணக்கடன். யாரும் திருப்பிக் கேட்டு வற்புறுத்தவில்லை. ஏழைக்கு ஏழை உபகாரம் என்றார்கள். கண்ணில் நீருடன் அனைவரையும் கும்பிட்டாள். குணமாகி எழுந்தபோது உடம்பின் பலம் முன்னிலும் பாதியாய்க் குறைந்துவிட்டது. ஆனால் அதன் அழகு குறையவில்லை.

வேலை செய்த வீடுகளில் ''நீ பாட்டுக்கு வராம இருந்துட்டா எங்களுக்கு எப்படித் தெரியும்? இந்த மாதிரி ஜுரம்னு ஒரு வார்த்தை சொல்லியானும் அனுப்பினாயா? ஒரு வழியா நின்னுக்கோ'' என்று அனுப்பிவிட்டார்கள்.

வேலையில்லாமல் வயிறு காய்ந்தது. அக்கம்பக்கம் மட்டும் லட்சாதிபதிகளா என்ன? எல்லாரும் கைக்கும் வாய்க்குமாய் உயிர் வாழும் வர்க்கம்தான். ஒரு நெருக்கடி, ஆபத்து என்றால் இயன்ற உதவி செய்வார்கள். வைத்துக் காப்பாற்ற யாருக்கு சக்தி இருந்தது?

இவளுடைய இரண்டு அறை போர்ஷன் உள்ளிட்ட ஸ்டோர் சொந்தக்காரனுக்கு இருந்தது. அவளைப் பராமரிக்கிறேன் என்றான். வாடகையே தரவேண்டாம் என்றான். பழைய வாடகைப் பாக்கியை மன்னித்துவிடத் தயார் என்றான். இதற்கெல்லாம் ஒரு விலை வைத்தான்.

அந்த விலையைத் தர அவள் ஒப்பவில்லை. தன் ஒரே சொத்தான அப்பா எந்த காலத்திலோ தங்கம் மலிவாயிருந்தபோது செய்து போட்ட, தங்கத்தோடுகள் ஜதையை அவனிடம் கொடுத்தாள். இக்கால மதிப்புக்கு வாடகைப் பாக்கியை ஈடு செய்யும் என்றாள்.

அப்போ இனிமே ஓசியில் குடியிருக்கப் போறேன்னு அர்த்தமா? முதல்ல வீட்டைக் காலி செய்.''

செய்தாள்.

பெருமாள் கோவில் அர்ச்சருக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தின் நிழலில் சிறிது காலம் ஒண்டியிருந்து வேலை தேடினாள். கடைசியில் ஒரு தனியார் மருத்துவமனையில் ஆயா வேலை கிடைத்தது. அங்கேயே தங்கலும் உணவும். ஆனால் இரவும் பகலும் வேலை இடுப்பை ஒடித்தது. ஆயா, நர்ஸ், சமயங்களில் தோட்டி, சமையல் சிப்பந்தி என்று எந்த அவதாரமானாலும் சொன்ன சுருக்கில் எடுக்க வேண்டும். உடம்பைத் தேய்த்து உழைத்தாள். முப்பத்தைந்து வயது வரை அங்கேயே வாசம்.

ஒருநாள் கக்கூஸ் கழுவிக் கொண்டிருந்தபோது இருமல் வந்தது. பினாயில் நெடி என்று நினைத்தாள். மறுபடியும் இருமல் வந்தது. இப்போது இருமலோடு ரத்தமும் வந்தது.

நோயுற வேண்டுமானால் ஆஸ்பத்திரியைவிடப் பொருத்தமான இடம் வேறென்ன இருக்க முடியும்? ஆனால் காசம் தொற்று நோயாயிற்றே. அந்த உடம்பை விதம் விதமாய்த் தொட்டுப் பரீட்சை செய்தும் அந்த மார்பின்மேல் திரும்பத் திரும்ப ஸ்டெத் வைத்துப் பரிசோதித்தும் பலமுறை வெறும் துண்டைச் சுற்றிக் கொண்டு அவளை நுரையீரல் எக்ஸ்ரேக்கு நிற்க வைத்தும் ஆண் டாக்டர்கள் அது காசம்தான் என்று உறுதி செய்துவிட்டபிறகு அவளை எப்படி இனியும் அங்கிருக்க அனுமதிக்க முடியும்? மருத்துவமனையின் மற்ற பணியாளர்கள், நோயாளிகளைப் பற்றி யோசிக்க வேண்டாமா? நிர்வாகம், ''பாவம் ராஜாமணி. குட் ஒர்க்கர். வாட் எ பிட்டி'' என்று வருத்தம் தெரிவித்து, ஒரு மாதத்துக்கான மாத்திரைகளும், ஒரு மாதச் சம்பளமும் கொடுத்து அவளை வெளியே அனுப்பிவிட்டது.

நான்கு மாதங்களுக்குப் பின் நோயும் பட்டினியுமாய் ஓர் உச்சி வேளையில் அவள் சாலையோரம் மயங்கிக் கிடந்தபோது ஒரு மகளிர் சேவை மையத்தின் உறுப்பினி அவளைப் பார்க்க நேர்ந்து மையத்துக்கு எடுத்துச் சென்றாள்.

செங்கல் சிமெண்ட் என்ற பெயரில் அன்பும் மனித நேயமும் கொண்டு கட்டிய அந்த மையத்தில் அவளுக்கு இருக்க நிழல் கிடைத்தது. நோய்க்கு மருந்து கிடைத்தது.

நோய் குணமான பின் அவள் அங்கேயே தங்கித் தன்னாலியன்ற பணிகளைச் செய்தாள். அனாதைகளின் சுய சார்புக்காக அங்கு பல கைவினைகள் கற்பித்தார்கள். அவள் தையலும் காகித உறைகள் செய்வதும் கற்றுக் கொண்டாள். கிடைத்த ஊதியத்தை மையத்துக்கே கொடுத்தாள். சமையலறையிலும் உதவி செய்தாள்.

மையத்தில் புகல் பெறுபவர்கள் அங்கேயே நிலையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. வெளியில் கௌரவமான

உழைப்புக்கும் வாழ்க்கைக்கும் வாய்ப்புக் கிடைத்தால் ஏற்றுக்கொண்டு செல்லலாம்.

மையத்தின் தலைவியின் ஒரு சிநேகிதி என் அத்தைக்குத் தெரிந்தவளாக இருந்தாள். அத்தை வீட்டில் பல காலமாய் இருந்த வயதான சமையற்காரம்மாள் காலமானபோது சமையலுக்கு வேறு ஆள் தேவைப்பட்டது. அத்தை தம் தோழியிடம் சொல்ல, அவர் மையத்தின் தலைவியிடம் பேசினார்.

''கௌரவமான இடம், நல்ல மனிதர்கள். சமையலுக்கு நல்ல பெண் பிள்ளை வேண்டுமாம். நியாயமான சம்பளம் தருவார்கள். நன்றாய்ப் பார்த்துக் கொள்வார்கள். வீட்டோடு இருக்க வேண்டும். அங்கிருந்து யாராவது வருவார்களா?''

இப்படித்தான் ராஜாமணி மாமி என் அத்தை வீட்டில் சமையற்காரம்மாளாக வந்து சேர்ந்தாள். அத்தையைப் பார்க்க அதன்பின் ஒரு நாள் நான் போயிருந்த சமயம் காப்பி கொண்டு வந்து வைத்தபோது அந்த உடம்பைப் பார்த்து சிறிது நேரம் அசந்து போனேன். இத்தனைக்கும் மாமிக்கு அப்போது நாற்பத்திரண்டு வயது. நான் இருபது வயதான எம்.ஏ. முதலாண்டு மாணவன்.

மறுகணமே இப்படி வெறிப்பது அநாகரிகம் என பார்வையை விலக்கிக் கொண்டேன். துருத்திய பற்களும், சப்பை மூக்கும், உருட்டுக் கண்களும் அங்கங்கே மண்டை தெரிய மெலிந்திருந்த தலைமுடியையும் கவனித்தபோது சற்று அருவருப்பாக இருந்தது.

அத்தையிடம் ராஜாமணி மாமி ஒன்பதாண்டுகள் வேலை செய்தாள். இருவரிடை நட்பும் நெருக்கமும் ஏற்பட்டபிறகு மாமி தன் கதையை என் அத்தையிடம் சொல்ல, பிறகு அத்தையிடமிருந்து எனக்குத் தெரியவந்தது. இந்த ஒன்பதாண்டு காலத்தில் ஒரு சமயம் ஸ்டவ்விலிருந்து தீச்சுடர் ஒன்று மாமியின் வலது கண்ணில் பாய்ந்து சிகிச்சைகளை மீறி அந்தக் கண்ணில் பார்வை போய்விட்டது. அத்தை சமையலறையில் உதவி செய்ய முன்வந்த போதிலும் மாமி மறுத்துவிட்டாள். ஒற்றைக்கண் பார்வையோடு எப்போதும் போலவே தேவாமிருதமாய் சமைத்தாள். அப்படியே ஒரு ஞாயிறன்று மதியம் வீட்டுக்காரர்களுக்குத் தேவாமிருதம் பரிமாறிவிட்டுத் தலைவலி என்று படுத்தாள். நாலு நாட்களில் பிரக்ஞையற்ற நிலையில் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். இரண்டாம் வாரத்தில் செத்துப்போனாள். மூளையில் கட்டி.

அழுது சிவந்த கண்களுடன் அத்தை கொள்ளி போடும்படி என்னைக் கேட்டாள். அத்தையின் பிள்ளை ஜெர்மனியில் கல்லூரி ஆசிரியராய் இருந்தான். இங்கிருந்தால் அவனிடம் கேட்டிருப்பாள்.

ஒப்புக்கொண்டேன். இதோ ஓட்டேரி மயானத்தில் சிதையின் மேல் கிடக்கும் மாமியைக் கடைசி முறையாய்ப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். அந்த அழகான உடலமைப்பையும், அழகற்ற முகத்தையும் தாண்டி ராஜாமணி என்ற மனுஷியைப் பற்றிச் சிந்திக்கிறேன். இருபத்தொன்பது வயதில் அதற்கான பக்குவம் இருந்தது.

என்ன அர்த்தம் இந்த மனுஷியின் வாழ்க்கைக்கு? சாரமற்ற வாழ்வு. சாரமற்ற சாவு. பிறந்தாள், துன்பப்பட்டாள், இறந்தாள். இது ஒரு வாழ்க்கையா? தொடர் சங்கிலியாய் துர்பாக்கியங்கள். மீளாத அவலம். விதி எப்படிக் கொடுமைப்படுத்தியிருக்கிறது இந்த நல்ல ஆத்மாவை! பரிதாபத்துக்குரியவள்.

எரியூட்டினேன்.

அத்தை திரும்பி நடந்து கொஞ்ச தூரம் சென்றுவிட்டார்.

நான் நெருப்பு ஜுவாலையைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்றேன். பிறகு திரும்பினேன். பின்னால் ஒருவர். நடுத்தர உயரம், நரை முடி, சுருக்க முகம். பளிச்சென்ற பாலியஸ்டர் வேட்டி, சட்டை. கண்ணில் ஈரம் காயவில்லை.

நான் திரும்பியதும் கை குவித்து எனக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் திரும்பிச் செல்ல முனைந்தார்.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

''ஸார், கொஞ்சம் நில்லுங்க!''

நின்றார்.

''உங்களை எனக்குத் தெரியாதே! ஏன் கும்பிடறீங்க?''

கண நேரம் தயங்கி, ''அவளுக்குக் கொள்ளி போட்டதுக்கு'' என்றார் தாழ்ந்த குரலில்.

அவளுக்கு, வேற்று மனிதர்கள் 'அவள்' என்றா பண்பில்லாமல் சொல்வார்கள்? ஏதோ சொந்தக்காரர்தான்.

''மன்னிக்கணும். நீங்க மாமிக்கு என்ன ஆகணும்?''

''கணவன்''

உறைந்து நின்ற கணங்கள் கடந்தபின் இகழ்ச்சி தலை தூக்கியது.

''ஓகோ! இருபத்தோரு வயசுப் பெண்ணை வாழாவெட்டியாய் அம்போன்னு நிறுத்திட்டு விலகிப் போன கணவன்.''

''ராஜி வாழ்நாள் முடிய வாழாவெட்டியாய் இருந்திருக்க வேண்டியதில்லை. அவளை விட்டுட்டுப் போனப்புறம் நான் சில வருஷங்களில் மனசு திருந்தி, வேண்டாத சிநேகங்களையெல்லாம் விட்டுத்

தொலைச்சிட்டு அவளைத் தேடிப் போனேன். குமாஸ்தா வேலையை விட்டுட்டு சின்ன அளவில் சொந்தமா இரும்புச் சாமான்கள் தொழில் செஞ்சு கொஞ்சம் வசதியாயும் இருந்தேன். நல்ல முறையில் நான் முன்னுக்கு வந்துண்டிருந்த காலம் அது. அவளுக்கு அப்போ முப்பது வயசு. அப்பா செத்து, வீட்டைவிட்டு விரட்டப்பட்டு வேலை தேடி அலைஞ்சுண்டிருந்தாள். நான் அவள் கிட்ட மன்னிப்புக் கேட்டுண்டு அவளை என்னோடு திரும்பி வந்து சௌகரியமாய் வாழும்படிக் கூப்பிட்டேன். அவள் வர மறுத்து விட்டாள்.''

சாரமற்ற வாழ்க்கை என்கிறோம். சாம்பற்குவியல் என்று நினைத்திருப்பதிலிருந்து எதிர்பாராமல் ஒரு தீக்கங்கு வெளிப்படும்போது எவ்வளவு அதிசயம்!

ராஜாமணி மாமி செய்தது சரியா, தவறா என்று எனக்குத் தெரியாது. ஒரு மனிதன் தன் தவறுக்கு வருந்தி மனம் திருந்தி வரும்போது மன்னிக்காமல் இருக்கலாமா என்ற தார்மீகக் கேள்விக்கு என்னிடம் விடை இல்லை. அதேபோல், தொடர்ந்து ஆயிரத்துத் தொண்ணூற்றைந்து நாட்கள் உணவு சமைத்து வைத்துக்கொண்டு வராத கணவனுக்காகக் காத்திருந்து ஏமாந்து போகும் பெண்ணின் மனதில் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதையும் யாராலும் சொல்ல முடியாது.

ஆனால் ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும். தன்மானம் அடிபட்டுத் துடித்திருக்கலாம். துயரம் விரக்தியாய் இறுகிப் போயிருக்கலாம். அன்பு அறவே செத்திருக்கலாம். அது எதுவானாலும் அதன் காரணமாய் அவள் தன் வாழ்வில் சுகத்துக்கும் கஷ்டத்துக்குமிடையே தேர்ந்தெடுக்கும் ஒரு தருணம் வந்தபோது கஷ்டத்தைத் தேர்ந்தெடுத்தாள். நல்ல நிலையிலிருந்த கணவனுடன் சென்று வசதியாய் வாழ்ந்து அவள் தன் துன்பங்களுக் கெல்லாம் முடிவு கட்டியிருக்க முடியும். ஆனால் அதை அவள் புறக்கணித்தாள். அவள் வாழ்வின் தலையாய கணம் அது. தன் மனதுக்கு சரி என்று தோன்றியதற்கேற்ப முடிவுவெடுத்து அவள் தானாக ஏற்றுக் கொண்டது அவளுடைய அவல வாழ்வு. எனவே அது பரிதாபத்துக் குரியதல்ல. மரியாதைக்குரியது. கம்பீரம் கொண்டது.

அந்தக் கம்பீரம் அவளுக்கு எத்தகைய அந்தரங்கப் பொக்கிஷமாய் இருந்திருக்க வேண்டும். தன்னைப் பற்றி என் அத்தையிடம் எல்லாம் சொன்னபோது இந்த விஷயத்னத மட்டும் சொல்லவில்லையே!

ராஜாமணி மாமியை அவள் மரணத்துக்குப் பிறகுதான் பார்க்கிறேன்.

அந்த மனிதர் எப்போது போனார்?

நான் சென்று அத்தையுடன் சேர்ந்து கொண்டேன். ''ஹம், பாவம் ராஜி'' என்று அத்தை பெருமூச்சுவிட்டார்.

நான் எதுவும் சொல்லவில்லை.